**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.158/2017 – P.W.– 16**

Deposition of witness for Prosecution:

| | | |
|---|---|---|
| Name | : திரு. வேலாயுத தேவர் | Father's Name. ரத்தின தேவர் |
| Village | : பஞ்சநதிகுளம் | Age: 85 |
| Date | : 14.05.2025 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 14.05.2025.

**( 1, 4, 5, 9 முதல் 11, 13, 14, 16, 17 மற்றும் 19 ஆகிய எதிரிகள் ஆஜர். 2, 6, 7 மற்றும் 18 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக அவர்களது தரப்பு கற்றறிந்த வழக்கிறஞர்கள் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச.பிரிவு 317ன் கீழான மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது பஞ்சநதிக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வயது முதிர்வு காரணமாக வீட்டில் உள்ளேன். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான அ.சா.1, திரு. ஓ. எஸ். மணியனை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு யார் என்று தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 28.01.2010ஆம் தேதி மாலை கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் நடைபெற்ற எனது உறவினர் வெங்கடலாச்சலதேவர் மகன் திருமணத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை.

அந்த திருமணத்திற்காக அ.சா.1 திரு. ஓ. எஸ் மணியன் வந்திருந்தபோது அவருக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சனை குறித்து கேள்விப்பட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் விசாரணையில் கேள்விப்பட்ட உண்மை விவரத்தை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற, மாற்றி தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**. இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**